# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 19, சித்ரபானு—திருவள்ளுவர் ஆண்டு 2033
## 2002 மே 2, வியாழக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்."*

*பிறப்பினால் அனைவரும் சமம். செய்யும் தொழிலில் காட்டுகிற திறமையில் மட்டுமே வேறுபாடு காண முடியும்.*

### 1. வினாக்கள்-விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். வினா எண் 260, திரு. வி.ஆர். ராஜாங்கம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

**260—**

#### மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்

***6347—திரு. வி.ஆர். ராஜாங்கம்:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், கொண்டையாம் பட்டியிலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியத்தைச் சார்ந்த கொண்டையாம்பட்டியிலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்வு செய்வதற்கான கருத்துரு இதுவரை பெறப்படவில்லை. கருத்துரு பெற்றவுடன், அதைப்பற்றி மேல்மட்டக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு அரசின் நிதிநிலைக்குட்பட்டு மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணை உள்ளம் கொண்ட அன்னை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, ரூ. 2 இலட்சம் பணம் கட்ட வேண்டும் என்பதைத் தளர்த்தி, அலங்காநல்லூர் ஒன்றியம், கொண்டையாம்பட்டியில் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக வருகிற ஆண்டிலாவது மாற்றித் தர முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பொதுமக்கள் பங்குத் தொகையாகிய 2 இலட்ச ரூபாயைக் கட்டுவதற்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொள்கிறார்கள். இப்பொழுது இருக்கும் நிதிநிலையைப் பார்க்கும்போது பலபேர் ரூ. 2 இலட்சம், 1 இலட்சம் கட்டியுள்ள பள்ளிகளுக்குக்கூட உயர்த்திக் கொடுப்பதற்கு ஒரு சில பிரச்சினைகள் இருந்துகொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கின்ற அந்தக் கல்வி நிலையத்தில், உயர்நிலைப் பள்ளியில் 10-ஆம் வகுப்பில் 100 பேர் இருக்க வேண்டும். ஆனால் 66 பேர்கள்தான் இருக்கின்றார்கள். இருப்பினும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்க வேண்டுமென்றால் முதலில் 2 இலட்சம் ரூபாய் பங்குத் தொகையைக் கட்டியதற்குப் பிறகு அரசினுடைய நிதிநிலைக்கு ஏற்ப அதைப்பற்றி சிந்திக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 261, திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.